# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

************

**முறையீட்டு மனு எண்: 744/2016/பே.**

**ஆணை எண். 31/2018/நாள். 20–02–2018**

**திரு. ச. சரவணன்,**
**7–வது வார்டு முன்னாள் உறுப்பினர்,**
**தியாகதுருகம் பேரூராட்சி,**
**விழுப்புரம் மாவட்டம்.** — முறையீட்டு மனுதாரர்

**திரு மு. மணிமொழியன்,**
**செயல் அலுவலர்,**
**முத்துப்பேட்டை பேரூராட்சி,**
**திருவாரூர் மாவட்டம்.** — எதிர் மனுதாரர்

**ஆணை**

திரு ச. சரவணன், முன்னாள் 7வது வார்டு உறுப்பினர், தியாதுருகம் பேரூராட்சி என்பவரது 3.11.2015 நாளிட்ட முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 14628/2015/இ.2/நாள் 14.07.2016 ன்படி இம்முறைமன்ற நடுவத்தில் 25.07.2016 நாளன்று பெறப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு எண் 744/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு மீது உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும், அறிக்கைகள் பெறப்பட்டும் பரிசீலிக்கப்பட்டும் கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

திரு ச. சரவணன், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தியாகதுருகம் பேரூராட்சி நிர்வாகம் தொடர்பாக பல்வேறு புகார்களை தெரிவித்து தனது மனுவினை இம்முறையீட்டு மன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 28.07.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரை தனது முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (மனு தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015 ன் விதி 6ல்

நிர்ணயிக்கப்பட்வாறு கட்டணம் ரூ.10/-க்கான நீதிமன்ற வில்லையுடன், முறையீட்டு மனுவினை உரிய படிவத்தில் (படிவம்-1) சமர்ப்பிக்கக் தெரிவித்து ஆணையிடப்பட்டது. ஆனால் மனுதாரரால் முறையீட்டு மனு உரிய முறையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இம்முறைமன்ற நடுவ 11.01.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரரை தனது முறையீட்டு மனு தொடர்பான விளக்கங்களை பதிவு செய்யும்பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தில் 27.02.2017 அன்று ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் மேற்படி விசாரணைக்கும் ஆஜராகவில்லை.

இதனிடையே, இம்முறைமன்ற நடுவ 11.01.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க கோரி தியாகதுருகம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

மேலும் இம்முறைமன்ற நடுவ 04.08.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தனது தரப்பு விளக்கத்தினை பதிவு செய்ய 25.09.2017 அன்று நேரில் ஆஜராகிடுமாறு செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

தியாகதுருகம் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி பா.கோமதி இம்முறைமன்ற நடுவத்தில் 25.09.2017 அன்று நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் தியாகதுருகம் பேரூராட்சியில் 07.07.2017 முதல் பணி புரிவதாகவும் தனக்கு முன்னர் இருந்த செயல் அலுவலர் முறைமன்ற நடுவ ஆணைகளின்படி விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்காததால், தான் இப்பொது சமர்ப்பிப்பதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். ஒன்றரை ஆண்டுகளாக உளுந்தூர்பேட்டை செயல் அலுவலர் திரு மு.மணிமொழியன், தியாகதுருகம் பேரூராட்சியின் பொறுப்பு செயல் அலுவலராக இருந்ததாகவும், முறைமன்ற நடுவத்தில் இருந்து பெறப்பட்ட கடிதங்கள் எதுவும் தியாகதுருகம் பேரூராட்சி அலுவலகத்திற்கு அவரால் ஒப்படைக்கப்படவில்லை எனவும், எனவே தன்னால் அதற்கான பதில் அனுப்ப இயலவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். மேற்படி செயல் அலுவலர் தற்போது திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை பேரூராட்சியில் பணிபுரிவதாகவும் தெரிவித்துள்ளார். ஏற்கனவே முறையீட்டு மனுதாரர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மக்கள் குறை தீர்க்கும் நாளன்று இதே புகார் மனு அளித்துள்ளதால், மனு மீது விரிவான விளக்கத்தினை உரிய ஆதாரங்களோடு ஒரு வாரத்தில் அனுப்பிவைப்பதாக தனது வாக்குமுலத்தில் பதிவு செய்துள்ளார்.

தியாகதுருகம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது நேரடிவாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளவாறு முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கயினை தனது கடித ந.க.எண். 182/2015/அ.2/நாள் 09.10.2017ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 29.12.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் தியாகதுருகம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலரும், தற்போதைய திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலருமான திரு மு. மணிமொழியன், என்பவரை இம்முறைமன்ற நடுவத்தில் 14.02.2018 நேரில் ஆஜராகி, மேற்படி முறையீட்டு மனு குறித்தான உரிய விளக்கத்தினை பதிவு செய்ய ஆணையிடப்பட்டது.

திரு மு.மனிமொழியன், முன்னாள் தியாகதுருகம் பேரூராட்சியின் செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் **14.02.2018** அன்று ஆஜராகி முறையீட்டு மனு தொடர்பான தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......தான் தியாகதுருகம் பேரூராட்சியில் ஒரு ஆண்டுகாலமாக பணிபுரிந்து பின்னர் திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டைக்கு மாற்றலாகி வந்ததாகவும் தெரிவித்துள்ளார். தனது பணிக்காலத்திற்கு முன்பே திரு சரவணன் என்பவர் புகார் மனு அனுப்பியுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் திரு மணிமொழியன், பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். தான் தியாகதுருகம் பேரூராட்சி சம்பந்தமான எந்த ஆவணங்களையும் எடுத்துச் செல்லவில்லை எனவும், மேற்படி ஆவணங்கள் தியாகதுருகம் பேரூராட்சியின் முன்னாள் இளநிலை உதவியாளர் திரு பாலமுருகன் என்பவரிடமே இருந்ததாக தெரிவித்துள்ளார். புகார் மனுதாரர் திரு சரவணன் பேரூராட்சி மன்ற உறுப்பினராக இருந்ததாகவும், அவருக்கும் தலைவருக்கும் மனவருத்தம் உண்டு எனவும் தனது வாக்குமூலத்தில் முன்னாள் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். அந்த அடிப்படையிலேயே தலைவர் பேச்சை கேட்டு செயல்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். பேரூராட்சித்தலைவர் கூட்டம் முறையாக நடத்தவில்லை எனவும் மன்ற அனுமதியின்றி சில பணிகளை தலைவர் தன்னிடம் செய்யச் சொல்வார் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தனது பணிக்காலத்தில் 2 நாட்கள் மட்டுமே தியாகதுருகம் பேரூராட்சிக்கு சென்றதாகவும் மற்ற நாட்களில் அலுவலக கோப்புகளை உளுந்தூர்பேட்டை பேரூராட்சிக்கு வரவழைத்து செயல்பட்டுள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தன்னிடம் பேரூராட்சி தலைவர் சில வேலைகளை செய்யச் சொன்னதாகவும் மேற்படி வேலைகளை தான் செய்யவிலலை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தனக்கு முன்னர் திரு செந்தில் குமார் என்பவர் பேரூராட்சி செயல் அலுவலராக இருந்தார் எனவும் தற்போது அவர் விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் பேரூராட்சியில் பணிபுரிவதாகவும், அந்த காலங்களில் மன்ற அனுமதி பெறாமல் பணிகள் செய்யப்பட்டதாகவும் தனது வாக்குமுலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, தியாகதுருகம் பேரூராட்சியின் முன்னாள் /இந்நாள் செயல் அலுவலர்களின் நேரடி வாக்குமூலங்கள் மற்றும் தியாகதுருகம் பேருராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்கக் கோரியும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் தனது முறையீடு குறித்து தனது தரப்பிலான விளக்கங்களை பதிவு செய்ய கூடுதல் வாய்ப்பாக அழைப்பாணை அனுப்பியும் மேற்படி நேரடி விசாரணைக்கு வரத்தவறியுள்ளார். **இந்நிலையில் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவம் விசாரணைக்கு ஏற்புடையதல்ல எனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது**. இருப்பினும் தியகதுருகம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலரும் தற்போது திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை பேரூராட்சியில் பணிபுரிபவருமான **திரு மணிமொழியன் என்பவரது வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள சில முறைகேடுகள் குறித்து ஆவணங்களை பரிசீலித்து**

அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

பெறுநர்

1.திரு. ச. சரவணன்,
7–வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
தியாகதுருகம் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
தியாகதுருகம் பேரூராட்சி.
விழுப்புரம் மாவட்டம்

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்
கடற்கரை சாலை,
கடலூர்.

நகல்

4.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகம்,
குறளகம், சென்னை–108

செயலாளர். 23.2.18

22/2/18